செ.வெ.எண்.30 நாள்.10.08.2017

# திருநெல்வேலி மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழா முன்னேற்பாடு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் – மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், திருநெல்வேலி மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு, செய்ய வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் தொடர்பான அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (10.08.2017) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழா தொடர்பாக கோட்ட அளவில், கோட்டாட்சித் தலைவர்கள் ஆய்வுக் கூட்டங்களை நடத்திட வேண்டும். கடந்த ஆண்டு எந்தந்த பகுதிகளில் விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டதோ அந்த இடங்களில் மட்டுமே இவ்வாண்டும் சிலைகளை வைக்க வேண்டும். புதிய இடங்களில் சிலைகளை வைக்க அனுமதி வழங்கக் கூடாது. அதைப்போலவே சென்ற ஆண்டு எந்தந்த பகுதியில் விநாயகர் சிலைகள் கரைக்கப்பட்டதோ அந்த இடங்களில் மட்டும் தான் இவ்வாண்டும் சிலைகளை கரைக்க அனுமதிக்க வேண்டும். கடந்த ஆண்டுகளில் விநாயககர் சிலைகள் எந்த வழியாக எடுத்துச் செல்லப்பட்டதோ அதே வழியில் தான் இவ்வாண்டும் எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும். காவல் துறையினரால் அனுமதிக்கப்பட்ட வழியைத் தவிர வேறு வழியாக சிலைகளை எடுத்துச் செல்ல கூடாது. விநாயகர் சிலைகள் எடுத்துச் செல்லும் பகுதிகளில் குறுக்காக உள்ள மின் இணைப்பு வயர்களை தற்காலிமாக அப்புறப்படுத்திட வேண்டும். மரக்கிளைகளை அகற்றி, மின்விளக்கு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். சிலைகள் கரைக்கும் பகுதிகளில் சிலைகள் கரைக்கும் தினத்திற்கு ஒரு நாள் முன்பாகவே தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்போலவே, சிலை கரைக்கும் பகுதிகளில் உள்ள செடிகளை பொதுப்பணித் துறையினர் மற்றும் ஊராட்சிகளின் உதவி இயக்குநர் தத்தமது பகுதிகளில் அகற்றிடவும் மேலும் நீர் இல்லா குளங்களில் சிலை கரைப்பதற்காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

உவரி, வண்ணார்பேட்டை பேராட்சி அம்மன்கோவில், பாபநாசம் ஆகிய பகுதிகளில் விநாயகர் சிலைகள் கரைக்கும் இடங்களில் தீயணைப்பு வாகனங்கள் பணியாளர்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும். உவரி பகுதியில் கடலோர காவல் துறையினர் பணியில் இருக்க வேண்டும். வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் விழாவிற்கு முன்னதாகவே எந்த வழிகளில் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்கிறார்கள் என்பதை சோதனை செய்ய வேண்டும். கடந்த ஆண்டுகளில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்ட இடங்களையும் கண்காணிக்க வேண்டும். தாமிரபரணி, சிற்றாறு உள்ளிட்ட விநாயகர் சிலை கரைக்கும் பகுதிகளில் காவல் துறையின் மூலம் தேவையான பாதுகாப்பு ஏற்பாடு வசதிகளை செய்திட வேண்டும். ரசாயன வர்ணம் பூசப்பட்ட விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கு அனுமதிக்க கூடாது. சிலைகளை நிறுவும் அமைப்பினர் சிலைகளை கரைக்க எடுத்துச் செல்லும் வரை தாங்களே தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும். விழா அமைப்பாளர்கள் காவல் துறையினரால் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றிட அமைதியான முறையில் நமது மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழா நடைபெற

ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் ஈடுபடும் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண்சக்திகுமார்,இ.கா.ப., மாநகர காவல்ஆணையர் திரு.சுகுணசிங், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராமசுப்பிரமணியன், கோட்டாட்சியர்கள் (திருநெல்வேலி) திருமதி மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.